எனது இல RP/VIII/$A_1$ 2019.03.25

சுற்றிக்கை இலக்கம் : RP/AUO/2019-2

பணிப்பாளர் (கருத்திட்டம் மற்றும் பயிற்சி )
மாகாண விவசாய பணிப்பாளர்கள்
(மத்திய, வடமேல், வடமத்திய, கிழக்கு, ஊவா, சப்ரகமுவ, வடக்கு, தெற்கு, மேல்)
பணிப்பாளர் (விவசாயம்), இலங்கை மஹவலி அதிகார சபை

**பீடை கொல்லி சந்தைப்படுத்தல் பொறிமுறையை ஒழுங்கமைத்தல் அடுத்தகட்ட செயற்பாடுகள் தொடர்பில் மேறகொள்ளப்படவுள்ள தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை செயற்படுத்துதல்.**

மேற்போந்த விடயம் தொடர்பில் எனது 2018.02.15 ஆம் திகதிய சுற்றறிக்கை இலக்கம் RP/AUO/2018-1 ஊடாக அவதானம் செலுத்தப்பட்ட இலங்கையில் பீடைகொல்லி சந்தைப்படுத்தல் பொறி முறையானது பொருத்தமான ஒழுங்கு முறையுடன் நடாத்திச் செல்வதன் பொருட்டு நிலவும் நாளாந்த வரையறைக்குள் மேற்கொள்ளப்படுகின்ற மற்றும் மேற்கொள்ள இயலுமாக உள்ள செயற்பாடுகள் தொடர்பில் உங்களது கவனத்தை ஈர்ப்பதுவே இந்த சுற்றறிக்கையின் நோக்காகும்.

02. 1994 இன் 06 ஆம் இலக்க மற்றம் 2011 இன் 31 ஆம் இலக்க சட்டத்தின் ஊடாக திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 33 ஆம் இலக்கம் கொண்ட பீடைக்கொல்லி கட்டுப்படுத்தும் சட்டத்தின் 24 அ (1) ஆம் உப பிரிவின் ஊடாக பீடைக்கொல்லி பதிவாளர் ஆக எனக்கு சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய சுகாதார அமைச்சின் கீழ் இணைப்புச் செய்யப்பட்டு உணவு மற்றும் மருந்தக பரீட்சகர்கள் 41 பேரும் மற்றும் மாவட்ட பிரதான நிர்வாக பொது சுகாதார பரீட்சகர்கள் 10 பேர் பொருட்டும் பீடைக்கால்லி கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் உள்ள தவறுகளின் பொருட்டு வழக்கு தாக்கல் செய்வதற்கும் வழக்கு நடவடிக்கைகளை கண்காணிக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சுயுடன் அறியத் தருகினறேன். மேற்போந்த சட்டத்தின் 24 அ.(2) உப பிரிவிற்கு அமைய இந்த உத்தியோகத்தர்களுக்கு மேற்போந்த சட்டத்தின் கீழ் மேற்கொள்ள இயலுமான செயற்பாடுகள் மற்றும் கடமைகள் மத்தியில்

அ). பீடைக் கொல்லி பொதியிடல் மேற்போந்த சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு (14 ஆம் பிரிவு) அமைய மேற்கொள்ளப்பட்டுள்ளதா எனவும் ; மற்றும்

ஆ). எவராவது ஒரு நபரால் 16 ஆவது ஒழுங்கு விதிகள் (உணவு மாசுறும் வகையில் பீடைக்கொல்லி பயன்பாடு) மீறப்பட்டுள்ளதா எனவும் ; மற்றும்

இ). வர்த்தகர்கள் யாபேரினாலும் பீடைக்கொல்லி விற்பனையின் பொருட்டு சான்றிதழ் பெற்றுள்ளார்களா என (21 அ (1) உப பிரிவு) ;

சந்தேகமின்றி தெரிந்து கொள்ளவும் வழக்கு தாக்கல் செய்வதற்கு மற்றும் வழக்கு நடவடிக்கைகளை கண்காணிக்கவும் அதிகாரம் உள்ளது. ஒவ்வொரு மாகாணங்களையும் பிரதி நிதித்துவப்படுத்தும் வகையில் நாடு முழுதும் உள்ளடங்கப்படுவதைப் போன்று பெயர் குறிப்பிடப்பட்ட உணவு மற்றும் மருந்து பரீட்சகர்கள் மற்றும் மாவட்ட நிர்வாக பிரதான பொது சுகாதார பரீட்சகர்கள் 51 பேரினதும் பெயர் பட்டியல் இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன்.

03. 1994 ஆம் ஆண்டு 06 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கம் கொண்ட பீடைக்கொல்லி கட்டுப்பாடு செய்யும் சட்டத்தின் 5(1) (ஆ) பிரிவிற்கு அமைய கள ஒழுங்குபடுத்துதல் செயற்பாடுகள் திறனாக மேறகொள்ளுதல் மற்றும் செயலாற்றுகை மீளாய்வு செயற்பாடுகளின் பொருட்டு உப குழுவொன்றினை ஸ்தாபிப்பது போன்றன தொடர்பில் 2018.12.18 ஆம் திகதி இடம் பெற்ற முதலாவது; ஒன்று கூடலின் போது பீடைக் கொல்லி அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள் யாபேரின் பொருட்டும் முறையான வழிகாட்டல் மற்றும் தேவையான செயலாற்றுகை இலக்கினை அடைந்து திறனாக பீடைக்கொல்லி சந்தைப்படுத்தல் பொறி முறையினை ஏற்படுத்தும் பொருட்டு மாகாணங்களுக்கிடையே விவசாய பணிப்பாளர்கள், மாகாண விவசாய பணிப்பாளர்கள் ( மத்திய, மேல், வடமத்திய, கிழக்கு, ஊவா, சப்ரகமுவ, வடக்கு, தெற்கு, மேல்) மற்றும் பணிப்பாளர் (விவசாயம்), இலங்கை மஹவலி அதிகாரபை போன்ற பிரிவுகளை பிரதி தித்துவப்படுத்தும் வகையில் கூட்டு இணைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இது தொடர்பில் 2019.03.02 ஆம் திகதி இடம் பெற்ற விவசாய பணிப்பாளர் சபை ஒன்று கூடலின் சுட்டிக் காட்டப்பட்டவற்றிற்கு தேவையான இணக்கப்பாடு கிடைக்கப் பெற்றுள.

04. இதற்கிடையில் எனது 2018.02.15 ஆம் திகதிய சுற்றறிக்கை இலக்கம் RP/AUO/2018-1 ஊடாக அவதானம் செலுத்தப்பட்டதற்கு அமைய பீடைக்கொல்லி சந்தைப்படுத்தல் பொருட்டு சந்தைப்படுத்தல் சான்றிதழ் வழங்குவதில் உள்ள பலவீனமான செயலாற்றுகை மேலும் நிலவி வருகின்ற நிலமையை நான் அவதானிக்கினறேன். நாடு பூராவும் 2018 ஆம் ஆண்டில் சந்தைப்படுத்தல் 1057 இன் பொருட்டு அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக நாடளாவிய அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களது செயலாற்றுகை அறிக்கைகள் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. (தயவு செய்து கீழ் உள்ள அட்ட வணையை பார்க்கவும்) இந்த எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டு பொருட்டு ஒத்த காலப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்கள் 1461 ஆன எண்ணிக்கையுடன் ஒத்திசைத்து பெற்றுள்ள முன்னேற்றம் ஆகும். மேலும் குறைந்த மட்டத்தில் நிலவி வருவதை சுட்டிக் காட்டுகின்றேன். இது வரையில் இந்த பணிமனைக்கு அறிக்கை செய்யப்பட்டுள்ள நாடளாவிய ரீதியில் நடாத்திச் செல்லப்படுகின்ற பீடைக்கொல்லி

சந்தைப்படுத்தல் 2294 இன் மத்தியில் அனுமதிப் பத்திரம் பெற்றிருப்பது நூற்றிற்கு 46 வீதம் மாத்திரமே செயலாற்றுகையுடன் என மேலும் பதிவாகின்றது. இதற்கிடையில் இந்த குறைவான செயலாற்றுகை மற்றும் சில மாவட்டங்களில் மற்றும் மஹவலி அதிகார பிரதேசத்திற்குள் நடாத்திச் செல்லப்படுகின்ற பீடைக்கொல்லி சந்தைப்படுத்தல் தொடர்பில் தகவல்கள் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரம் உள்ள உத்தியோகத்ர்கள் நடவடிக்கை மேற்கொள்ளாமை தொடர்பிலும் கணக்காய்வு அறிக்கைகளின் போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்பதை மீண்டும் ஒரு முறை அழுத்தத்துடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

05. நாடு பூராவும் செயற்படுத்தப்படுகின்ற பீடைக் கொல்லி சந்தைப்படுத்தல் சகலதும் கட்டாயமாக பீடைக்கொல்லி சந்தைப்படுத்தல் சான்றிதழ் அதிகாரத்தின் கீழ் சந்தைப்படுத்தல் மேற்கொள்ளப்படுவதுடன், சொல்லப்பட்ட சட்டத்தின் 21 (அ) எனும் பிரிவிற்கு அமைய சந்தைப்படுத்தல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுப்பது முறையான புலனாய்வின் பின்னர் பிரதேச பொறுப்பு அதிகார உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயம் ஆகும். அவ்வகையில் இவ்விடயங்களை மேற்கொள்வதன் பொருட்டு சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சகல அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களும் அமைப்பு ரீதியாக பொறுப்பு சொல்வதற்கு உட்பட்டுள்ளார்கள் என்பதை அழுத்தமாக கூற விரும்புகின்றேன். இந்த செயற்பாட்டை திறனாக மேற்கொள்ளல் மற்றும் தேவையான பரீட்சிப்பு / புலனாய்வுகள் மேற்கொள்வதன் பொருட்டு ஒவ்வொறு பிரதேச பொறுப்பு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களின் கீழும் தேவை என கருதும் பட்சத்தில் விவசாய ஆலோசகர்கள் சிலரை பெயர் குறிப்பிட்டு அனுப்பியதன் பின்னர் மேற்போந்த சட்டத்தின் கீழ் ஏற்படும் தவறுகள் பொருட்டு வழக்கு தாக்கல் செய்யவும் மற்றும் வழக்கு நடவடிக்கைகளில் கண்காணிக்கவும் அதிகாரம் மிக்க ஒருவராக பெயர் குறிப்பிட முடியும். ஆகவே , இதன் கீழ் தற்போதைக்கு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விவசாய ஆலோசகர்களை தவிர இன்னும் புதிய விவசாய ஆலோசகர்கள் பொருட்டு தேவையான நாளாந்த அதிகாரங்களை பெற்றுக் கொடுப்பதற்கு பொருத்தமான சிபாரிசை எனக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

06. சுகாதார அமைச்சின் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள உணவு மற்றும் மருந்து பரீட்சகர்கள் மற்றும் மாவட்ட நிர்வாக பிரதான பொது சுகாதார பரீட்சகர்களினால் மிகவும் நம்பிக்கையுடன் மேற்போந்த சட்டத்தின் கீழ் தவறுகள் மேற்கொள்கையில் வழக்கு தாக்கல் செய்வதற்கு மற்றும் வழக்கு நடவடிக்கைகளை கண்காணிக்கவும் உயிர்ப்புள்ள பங்கு பற்றுகையினை பெற்றுக் கொடுப்பதற்கு அரம்ப கலந்துரையாடல்களின் போது இணக்கப்பாட்டை வெளிப்படுத்தி உள்ளன. ஆகவே அங்கு உரியவாறு சிறந்த நன்மையை சகல அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களும் பெற்று இருப்பார்கள் என நம்புகின்றேன். அதன் நிமித்தம் தேவையான முறையான இணைப்பை ஏற்படுத்துவதன் பொருட்டு மாகாண மட்டத்தில் அதிகாரம் உள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் வழக்கு தாக்கல் செய்வதற்கும் மற்றும் வழக்கு நடவடிக்கைகளை கண்கானிப்பதற்கும் அதிகாரம் மிக்க உத்தியோகத்தர்களை சந்தித்து கொள்வதை பொருத்தமானது

என ஆலோசிக்கப்படுவதுடன் அதன் பொருட்டு பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கினறேன்.

07. மேற்போந்த சட்டத்தின் கீழ் தவறுகள் பொருட்டு வழக்கு தாக்கல் செய்தல் மற்றும் வழக்கு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கும் அதிகாரம் மிக்கவர்கள் என்ற வகையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விவாசய ஆலோசகர்கள் தொடர்பில் முற் செயற்பாட்டு முறைக்க் மைய பிரதேசத்தில் பீடைக் கொல்லி அதிகாரம் உள்ள உத்தியோகர்த்தராவர். மேற்போந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் உத்தியோகத்தராக நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

08. இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அடுத்த செயற்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை செயற்படுத்திவதன் பொருட்டு உங்களது முன் அவதானத்தை செலுத்துமாறு இடம்பெறுகின்ற சட்ட ஒதுக்கீடுகளை மீறாதவாறு தேவையான செயலாற்றுகை இலக்கினை அடைந்து கொள்வதற்கு அவதானம் செலுத்துவதனை பெரிதும் எதிர் பார்க்கின்றேன்.

ஒப்பம் : பேராசிரியர் ஜே.ஏ.சுமித்

பீடைக்கொல்லி பதிவாளர்.

பிரதிகள்

1. விவசாய பணிப்பாளர் நாயகம் – தகவலுக்காக
2. பிரதி சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் (சூழல் மற்றும் தொழிற் சுகாதார மற்றும் உணவு சுகாதாரம்)
3. பணிப்பாளர் (வி.க.அ.) – தகவலுக்காக
4. மாவட்ட விவசாய பணிப்பாளர்கள் - தகவலுக்காக மற்றும் அறிவூட்டுவதற்காக
5. உள்ளக கணக்காய்வு
6. திரு.எஸ்.என்.எல்.ரத்னவீர (உ.வி.ப) தகவலுக்காகவும் தேவையான இணைப்பு மற்றும் மீளாய்வு மேற்கொள்வதன் பொருட்டு

S. MOHAMED ZUWAI
SWORN TRANSLATOR
Department of Animal Production & Health
Getembe, Peredeniya